Deposition of Witness
In the court of the Additional Subordinate Judge, Tenkasi.
Mcop 32 of 2021
ம.சா.1 சேர்மராஜா

| | | |
|---|---|---|
| Name | | சேர்மராஜா |
| Father's Name | | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

---

13.09.2022 சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ1. டி.என். 09 ஏ.இ.8215 என்ற பதிவு எண் கொண்ட Huyndai car-ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ2. டி.என். 72 என். 1924 என்ற பதிவு எண் கொண்ட பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ3. டி.என்.79 3694 என்ற பதிவு எண் கொண்ட ஆம்புலன்சின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ4. என் ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ5. அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. மருத்துவ செலவு விபர பட்டியல் அசல் ம.சா.ஆ6. எஸ்ரே அசல் ம.சா.ஆ7. மனுபடி உத்தவராக வேண்டுகிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து அதிகாலை 4.30மணிக்கு நடந்தது என்றால் சரிதான். நான் பாபு என்பவரை டி.என்.79 3694 என்ற பதிவு எண் கொண்ட ஆம்புலன்சில் அவரை சிகிச்சைக்கு கொண்டு போகும் போது தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். திருச்சி டூ சென்னை நெடுஞ்சாலை ரோட்டில் வேப்பூர் லெமன் ஹோட்டல் அருகில் நான் சென்ற வாகனம்

எங்களுக்கு முன்னால் சென்ற டி.என்.09 ஏ.இ8215 என்ற வாகனத்தில் மோதி மேற்படி வாகனம் திரும்பவும் அரசு பேரூந்து மீதும் மோதியது என்றால் சரிதான். நான் ஒட்டி சென்ற வாகனம் ஆம்புலன்ஸ் என்பதால் உள்ளே இருந்த நபருக்கு மருத்துவ சிகிச்சை செய்ய வேண்டி வேகமாக சென்ற போது தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். வேப்பூர் காவல்நிலையத்தில் என்மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் ஒட்டி சென்ற ஆம்புலன்ஸை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு பின்பு நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தகவலும் சொல்லவில்லை., கோரிக்கை மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஈடுபட்ட வாகனம் விபத்து சமயத்தில் கேசவன் டிரஸ்ட் என்ற பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். அது என் பெயரில் இருப்பதாக துலங்காது என்றால் சரிதான். நான் கேசவன் டிரஸ்டில் இருந்து ஆம்புலன்ஸை விலைக்கு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த போது வாகனத்தை என் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. பெயர் மாற்றம் செய்யாமல் வாகனத்தை ஒட்டி விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் எனக்கு 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.